[2nd November 1962

THE HON. SRI V. RAMAIAH: (அ) & (இ) A scheme for modernising the channels in the old delta area in Thanjavur district under the Cauvery, Vennar and their branches is under investigation by a Special Division of the Public Works Department.

**திரு. க. ர. நல்லசிவம்:** இதன் மூலமாக புதிய நிலங்கள் ஏதாவது சாகுபடிக்குக் கொண்டுவர முடியுமா? அல்லது பழைய நிலங்களுக்கு நல்ல தண்ணீர் சப்ளை கிடைப்பதற்கு இந்தத் திட்டம் ஏற்பாடாகியிருக்கிறதா?

**கனம் திரு. வெ. ராமையா:** இந்தத் திட்டத்தின் முக்கியமான நோக்கம் என்னவென்றால், அந்த ஜில்லாவிலுள்ள விவசாயி களுக்கு காலா காலத்தில் தண்ணீர் கிடைப்பதற்கான புது முயற்சியை எடுத்துக் கொண்டிருக்கிறோம். இந்த வேலையைத் தொடர்ந்து செய்யும்பொழுது இன்னும் அதிகமான அளவுக்கு தண்ணீரை அந்த ஜில்லாவில் இருக்கக்கூடிய மற்ற நிலங்களுக்கும் கொடுக்க முடியுமா என்பது பரிசிலனை செய்யப்பட்டு வருகிறது.

**திரு. க. ர. நல்லசிவம்:** இதேபோன்று ராஜ்யம் பூராவிலுமுள்ள நதிகளுடைய வாய்க்கால்களை எல்லாம் ஒட்டுமொத்தமாகப் பரிசிலனை செய்து இம்மாதிரி வேலையை மேற்கொள்ளுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

**கனம் திரு. வெ. ராமையா:** தஞ்சை ஜில்லாவில் பரிசிலனை செய்யவேண்டுமென்பதே இப் புது முயற்சி. ஆனால் இதில் விசேஷ கவனம் செலுத்தி, இதில் ஏற்படக்கூடிய நல்ல சூழ்நிலை தெரிந்த பிறகு, மற்ற இடங்களுக்கும் பரவலாக விஸ்தரிக்க வேண்டுமென்பதுதான் என்னுடைய ஆசை. இருந்தாலும் உடனடியாக பெரியார் ஸிஸ்டம் தாம்பிரபாணி ஸிஸ்டம் போன்ற முக்கியமான பகுதிகளுக்கு இந்தப் பரிசிலனையை விஸ்தரிக்க வேண்டுமென்பதுதான் அரசாங்கத்தின் நினைப்பு.

* **1098 கேள்வி.—திரு. சா. ராமசாமி:** கனம் பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கொள்ளிடம் ஆற்றில் மஞ்சமேட்டுக்கருகிலிருந்து சினை ஆறு பிரித்து பாசன வசதியளிக்கும் உத்தேசத்துடன் செய்யப்பட்ட சர்வே எந்தக் கட்டத்திலுள்ளது?

(இ) எப்போது வேலை துவங்கப்படும்?

THE HON. SRI V. RAMAIAH: (*a*) & (*b*) The scheme is the same as the Marudayar Reservoir Scheme in Udayarpalayam taluk and it has been deferred for the present.

### விதைப்பண்ணை

* **1099 கேள்வி.—திரு. இரா. நாராயணன்:** கனம் விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

உடையார்பாளையம் வட்டம், செந்துரைகிராமத்தில் விதைப் பண்ணை ஒன்று நிறுவ உத்தேசமுண்டா?